# புதுச்சிருஷ்டிக்கான சிந்தனை துளிகள்

# 24

டிசம்பர் 2025

## சமாதானம்

நான் என்னைச் சுற்றி நோக்கிப்பார்க்கையில் . . . எத்தனை மனுஷர்கள் என்னைப் போன்று அல்லது ஒருவேளை இன்னும் ஆழ்ந்த துயரங்களில்/பெரிய சங்கடங்களில் காணப்படுகின்றார்கள் என்றும், அடைக்கலமாய்த் தஞ்சம்புகுவதற்கு அவர்களுக்கு ஒரு தந்தை இல்லையே என்றும் பார்க்கின்றேன்.

நான் பின்னே திரும்பிப்பார்க்கையில் . . . நான் வழிநடத்தப்பட்ட மொத்த பயணத்தையும், மேலும் நான் கண்டடைந்த அளவில்லா இரக்கத்தையும் நினைத்துப்பார்க்கின்றேன்.

நான் முன்னே நோக்கிப்பார்க்கையில் . . . என் பரலோக வாழ்வு வாசலருகே இருப்பதைப் பார்க்கின்றேன். அங்கே எனது வழிகாட்டியாகிய இயேசுவும், எனது தேவனும் இருக்கின்றார்கள்; விரைவில் நானும் அங்கே போய் சேர்ந்திடுவேன்.

இப்படி நான் சுற்றியும், பின்னேயும், முன்னேயும் நோக்கிப்பார்த்து சிந்தித்த பிற்பாடு, எனது துன்பத்தை அதன் முக்கியத்துவம் மற்றும் உட்பொருளை உணர்ந்துபார்க்கும் நேரத்திற்குள்ளாக, என் துயரங்களின் வேதனை யாவும் முற்றிலும் மறைந்துவிடுகின்றன.

- BIBLE STUDENT ARCHIVES